Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 25 (10-12-1992) வியாழக்கிழமை ஓசை 296

## முக்கிய மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு

யாழ் போதனா வைத்தியசாலையில் முக்கிய மருந்துகளுக்கு நிலவிவரும் தட்டுப்பாடு தொடர்கிறது. அங்கு பனடோல், ஆஸ்பிரின், அன்ரிபயற்றிக்ஸ் மற்றும் உயிர்ச்சத்துக் குளிசைகள் போன்றவற்றிற்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் இம்மருந்துகளைத் தனியார் மருந்துச்சாலைகளில் கொள்வனவு செய்யவேண்டிய நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதிக பாவனையிலுள்ள இம்மருந்துகளுக்கு நிலவும் தட்டுபாட்டைப் பயன்படுத்தி சில தனியார் மருந்துச்சாலைகள் இவற்றை இரண்டுமடங்கு விலைக்கு விற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

(பா)

# இராணுவத்தின் மனவுறுதி தளர்ந்துவிட்டது

# விடுதலைப்புலிகளுடன் போரிடுவது கடினம்

## சிங்கள சிப்பாய்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

நீண்டகாலம் யுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருவதினாலும் இராணுவத்தினருக்கு பாரிய உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதினாலும சிப்பாய்களின் மனவுறுதி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது என வவுனியாவில் நிலை கொண்டுள்ள சிங்கள சிப்பாய்கள் தெரிவித்தனர். ‘திவயின’ என்னும் சிங்கள பத்திரிகைக்கு அவர்கள், நன்கு பயிற்றப்பட்ட படையினர் இன்றியும், நவீன ஆயுதங்களின்றியும் புலிகளுடன் போரிட முடியாது எனவும் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; பயிற்றப்பட்ட படையினரோ, நவீன ரக ஆயுதமோ இன்றி படையினரை பாதுகாப்பு நடவடிக்கையில் துரிதமாகப் பயன்படுத்துவது முடியாத காரியம். இதனாலே விடுதலைப்புலிகளின் தாக்குதலின்போது படையினர் தமது பங்கர்களை விட்டு விட்டு ஓட வேண்டி ஏற்படுகின்றது.

வவுனியாவில் பாதுகாப்பு பங்கர்களுக்கு முன்னர் 5 அல்லது 6 இராணுவத்தினர் இருந்தார்கள். ஆனால் தற்போது ஒரு இராணுவ வீரனும், பொலிஸ் கான்ஸ்டபிளும் மட்டும் இருக்கின்றனர். பங்கருக்கு சென்றால் மற்றவர் வரும்வரை நாம் வெளியேற முடியாது.

பாதுகாப்பு படையினருக்கு தேவையான வாகன வசதிகள் இல்லை சில முகாம்களில் சில தனியாரிடம் பெறப்பட்ட லொறிகள் மட்டும் உள்ளன. வாகனவசதி இன்மையினால் முகாம்களில் இருந்து உணவு வகைகளை நேரத்திற்கு பகிர்ந்தளிக்க கூட முடிவதில்லை. காயப்பட்ட ஒரு பாதுகாப்பு படையினரைக்கூட ஆபத்தில் கொண்டு செல்ல முடியாத ஒரு நிலை உள்ளது.

(4 ஆம் பக்கம பார்க்க)

## மதக் கலவரத்தில் 675 பேர் வரை பலி

### குஜராத்தில் 20 பேர் உயிருடன் தீவைப்பு

(டில்லி)

இந்தியாவில் அயோத்தி பாபர்மசூதி தகர்க்கப்பட்டது சம்பந்தமான வன்முறைகளில் சுமார் 675 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர்.

மேற்கு வங்காளத்தில் சில இடங்கள் நீங்கலாக மற்ற இடங்களில் ஊரடங்கு பத்து மணிநேரத்துக்குத் தளர்த்தப் பட்டது.

உத்தரப் பிரதேசத்தில் நேற்று நடந்த புதிய வன்முறை ஒன்றில் 17 பேர் பலி

(4ஆம் பக்கம் பார்க்க)

### 25 இந்துக்கள் கொலை; 50 கோவில்களுக்கு தீவைப்பு

பாகிஸ்தான் தலைநகர் கராச்சியில் நேற்று இடம் பெற்ற வன்முறைகளில் 25க்கு

பாகிஸ்தானில் வன்முறை

மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ஆம் பக்கம் பார்க்க)

### பங்களாதேஷ் வன்முறையில்; 5 பேர் பலி; பலர் காயம்

(டாக்கா)

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாக பங்களாதேஷில் ஏற்பட்ட வன்முறைகளில் இதுவரை ஐந்து பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இறந்தவர்களில் ஒருவர் முஸ்லிம் என்றும் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தொலைக் கல்வி பரீட்சை விண்ணப்பங்கள்

தொலைக் கல்வி கற்கை நெறியின் கீழ் பயிலுநர் ஆசிரியர்களாக பயில்வோருக்கான முதலாவது தொகுதிப் பரீட்சைக்கான விண்ணப்ப படிவங்கள் அவர்களுக்குரிய பிராந்திய நிலையங்களில் தயாராக உள்ளன. எனவே நாளை வெளி...

## எந்த ஓர் அமைப்பையும் தடைசெய்வதை எதிர்ப்பேன்

– சந்திரசேகர்

(டில்லி)

எந்த ஓர் அமைப்பையும்...

## வீரச்சாவு



## வர்த்தக விசாவுடன் செல்ல முயன்ற 50 தமிழர்கள் கைது

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வர்த்தக விசாவுடன் பயணம் மேற்கொள்ள இருந்த 50மேற்பட்ட வடக்கு-கிழக்கு இளைஞர், யுவதிகள் குடிவரவு குடிஅகல்வு திணைக்கள அதிகாரிகளினால் கண்டு பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக திணைக்கள உயர் அதிகாரி தெரிவித்தார்.

கடந்தவாரம் குடிவரவு குடி அகல்வு உயர் அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடத்திய திடீர் சோதனை மூலம் இவர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். நாளாந்தம் 15க்கும் அதிகமானவர்கள் இப்படிச் சட்ட விரோதமான...

## கொழும்பில் நேற்று 500 தமிழர் கைது

(கொழும்பு)

கொழும்பில் நேற்று 500...

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் மூவாயிரம் தமிழர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்...

சுமார் 675 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர்.
மேற்கு வங்காளத்தில் சில இடங்கள் நீங்கலாக மற்ற இடங்களில் ஊரடங்கு பத்து

## பங்களாதேஷ்வன்முறையில்; 5 பேர் பலி; பலர் காயம்

(டாக்கா)

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாக பங்களாதேஷில ஏற்பட்டவன்முறைகளில் இதுவரை ஐந்து பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இறந்தவர்களில் ஒருவர் முஸ்லிம் என்றும் பொலிஸ் தாப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ... 50 கோவில்களுக்கு தீவைப்பு

பாகிஸ்தான் தலைநகர் கராச்சியில் நேற்று இடம் பெற்ற வன்முறைகளில் 25க்கு

### பாகிஸ்தானில்வன்முறை

மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## எந்த ஓர் அமைப்பையும் தடைசெய்வதைஎதிர்ப்பேன்

**- சந்திரசேகர்**

(டில்லி)

எந்த ஓர் அமைப்பையும் தடைசெய்வதைத் தான் கொள்கையளவில் எதிர்ப்பதாக சமாஜவாதி ஜனதாக்கட்சித் தலைவர் சந்திரசேகர் கூறினார்.

அயோத்தி நிலைமையைச் சமாளிப்பதில் பிரதமர் நரசிம்மராவ் கொஞ்சம் கூடுதலாகவே செயற்பட்டு விட்டதாக நேற்றுப் புதுடில்லியில் செய்தியாளர் கூட்டத்தில் பேசிய

(4ஆம் பக்கம் பார்க்க)

## தொலைக் கல்வி பரீட்சை விண்ணப்பங்கள்

தொலைக் கல்வி கற்கை நெறியின் கீழ் பயிலுநர் ஆசிரியர்களாக பயில்வோருக்கான முதலாவது தொகுதிப் பரீட்சைக்கான விண்ணப்ப படிவங்கள் அவர்களுக்குரிய பிராந்திய நிலையங்களில் தயாராக உள்ளன. எனவே நாளை வெள்ளிக்கிழமையன்று சகல பயிலுனர் ஆசிரியர்களும் சமுகமளிக்கும்படி இணைப்பாளரும், பிரதிக்கல்விப் பணிப்பாளருமான துரை. தியாகராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

னர் பாதுகாப்பு நடவடிக்கையில் துரிதமாகப் பயன்படுத்துவது முடியாத காரியம். இதனாலே விடுதலைப்புலிகளின் தாக்குதலின்போது படையினர் தமது பங்கர்களை விட்டு விட்டு ஓட வேண்டி ஏற்படுகின்றது.

வவுனியாவில் பாதுகாப்பு பங்கர்களுக்கு முன்னர் 5 அல்லது 6 இராணுவத்தினர்

வர் வரும்வரை நாம் வெளியேற முடியாது.

வாகனவசதி இன்மையினால் முகாம்களில் இருந்து உணவு

ஒரு நிலை உள்ளது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# இலவசக்கல்வியைநிறுத்திவிட ஐ. தே. க. அரசு முயற்சி

## - தினேஷ் குணவர்த்தனா தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசு இலவசக் கல்வித்திட்டத்தை விரைவில் நிறுத்தத் திட்டமிட்டுள்ளதாக மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற மேற்படி முன்னணியின் இளைஞர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்; உலக வங்கியினதும் ஏனைய நிதி நிறுவனங்களினதும் ஆலோசனைகளுக்கு இணங்க இவ்வாறு இலவசக் கல்வியை நிறுத்துவதற்கான முயற்சிகளை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இலவசக் கல்வித் திட்டத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## திறந்த பல்கலைக் கழகம் கற்கை நெறிகளை ஆரம்பிக்குக

இலங்கை திறந்த பல்கலை கழகத்தின் யாழ் பிராந்திய நிலையத்தில் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள அனைத்து கற்லக நெறிகளையும் உடன் மீள ஆரம்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

நடைபெற வேண்டிய அனைத்து பரீட்சைகளையும் உடன் நடாத்த ஒழுங்கு செய்யுமாறும் புதிய கற்கை நெறிகளை மீண்டும் ஆரம்பித்து புதிய மாணவர்களை சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் யாழ். பிராந்திய நிலைய மாணவர்களும் மாணவர் நலன்புரி அமைப்பும் திறந்த பல்கலைக்கழக கொழும்பு தலைமை வளாகத்தை வலியுறுத்திக் கேட்டுள்ளனர். இதற்கு தேவையான பணியாளர்களையும் நியமித்து பணியாளர் பற்றாக்குறையை நீக்குமாறும் கேட்டுள்ளனர்.

மற்றும் கற்கை நெறி அலுவல்களின் நிமித்தம் கொழும்பு தலைமை வளாகத்திற்கு செல்லும் திறந்த பல்கலைக் கழக மாணவர்களுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் கப்பல் மூலம் கொழும்பு செல்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென யாழ் அரசு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் நோட்டம்

சிறிலங்கா விமானப்படையின் வேவு விமானமொன்று நேற்றுக்காலை 7.30 மணியளவில் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் அடிக்கடி பறந்து திரிந்து நோட்டமிட்டுச் சென்றுள்ளது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## போலிஆயிரம்ரூபாதாள்கள் பெருமளவு புழக்கம்

போலி ஆயிரம் ரூபா நோட்டுக்கள் தறபோது தாராளமாகப் புழக்கத்தில் இருப்பதாக தென்னிலங்கையில் பொலிஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன.

பொலிஸ் வட்டாரங்கள் மேலும் கூறுகையில்; அண்மையில் அளுத்கம வங்கிக்கு நகை அடைவு மீட்க வந்த ஒருவரிடமிருந்து பெருமளவு போலி ஆயிரம் ரூபா நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து அந்த நபர் கைது செய்யப்பட்டார் எனவும், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து பேலும் பலர் இத்தகைய போலி நோட்டுக்களால் அவதியுறுவது தெரிய வருவதாகவும கூறியுள்ளனர்.

## வீரச்சாவு



வீரவேங்கை குயிலன்

07-12-92 அன்று விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் சுகவீனம் காரணமாக யாழ். வைத்தியசாலையில் மரணமடைந்தார். வீரவேங்கை குயிலன் (கந்தசாமி சுதாகரன் வயாவிளான்) என்பவரே சுகவீனம் காரணமாக மரணமடைந்தவராவார்.



வீரவேங்கை
இளங்குயில் (பியூரி)

08-12-92 அன்று யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் பெண் போராளி வீரவேங்கை இளங்குயில் / பியூரி (கஸ்மீர் ஜெயராணி, மாதகல) வீரச்சாவு அடைந்தார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

# வர்த்தக விசாவுடன் செல்ல முயன்ற 50 தமிழர்கள் கைது

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வர்த்தக விசாவுடன் பயணம் மேற்கொள்ள இருந்த 50மேற்பட்ட வடக்கு-கிழக்கு இளைஞர், யுவதிகள் குடிவரவு குடிஅகல்வு திணைக்கள அதிகாரிகளினால் கண்டு பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக திணைக்கள உயர் அதிகாரி தெரிவித்தார்.

கடந்தவாரம் குடிவரவு குடிஅகல்வு உயர் அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடத்திய திடீர் சோதனை மூலம் இவர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். நாளாந்தம் 15க்கும் அதிகமானவர்கள் இப்படிச் சட்ட விரோதமான முறையில் செல்வதாகவும் இதில் அநேகர் வட பகுதியைச் சேர்ந்த பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய இருப்பதாக

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் நேற்று 500 தமிழர் கைது

(கொழும்பு)

கொழும்பில் நேற்று 500 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து சிறிலங்கா பொலிசார் கொழும்பில் தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் கைது செய்து வருவது தெரிந்ததே. அங்கு கடந்த ஒரு வாரத்தில் மட்டும் மூவாயிரம் தமிழர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் கைது செய்யப்பட்ட ஐந்நூறு இளைஞர்களும் அண்மைக்கால தேடுதலின் போது வெளியிடங்களில் தங்கிவிட்டு தற்போது கொழும்பி

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# அகதி முகாம் விஸ்தரிப்பிற்கு பதில் வேலை வாய்ப்புகளை உருவாக்குக

## ஐ. நா. அதிகாரிகளிடம் புலிகள் கோரிக்கை

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் போன்ற நிறுவனங்கள் அகதிமுகாம்களை விஸ்தரிக்கும் திட்டத்திற்குப் பதிலாக பொருளாதார வேலைத் திட்டங்களை உருவாக்கி மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வசதிகளை செய்து கொடுக்க வேண்டும், இவ்வாறு நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகளுடனான சந்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## ஐ. நா. உயரதிகாரிகள் கொழும்பு திரும்பினர்

(நமது நிருபர்)

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வந்த அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயப் பிரதிநிதிகள் நேற்றுக் கொழும்பு திரும்பினர்.

இப்பிரதிநிதிகள் நேற்று முன்தினம் யாழ். அரசாங்க அதிபர் மற்றும் அரசசார்பற்ற இணையப் பிரதிநிதிகள் ஆகியோருடன் யாழ். நிலைமை பற்றிக் கேட்டறிந்து கொண்டமை தெரிந்ததே.

இவர்கள் நேற்றுக்காலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிகள், மந்திகையில் உள்ள பிரெஞ்சு வைத்திய குழுவினர் மறறும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து உரையாடினர்.

இவ்விரு அதிகாரிகளும் நேற்றுப் பருத்தித்துறை சென்று அங்கிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பலாலியில் இருந்து விமானம்மூலம் நேற்று மாலை கொழும்பு சென்றனர்.

இப்பிரதிநிதிகள் எதிர்வரும் சனிக்கிழமை ஜெனீவா செல்

(4ஆம் பக்கம் பார்க்க)


## புளொக் தயாரிப்பாளர் தேவை

எமதுநிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு "புளொக" தயாரிப்பாளர்கள் தேவை. அனுபவமும், திறமையும் உள்ளவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு எமது அலுவலகத்துக்கு நேரடியாகச் சமுகம் தரவும்.

கடமைக்கான சம்பளம் பேசித் தீர்மானிககப்படும்.

பொதுமுகாமையாளர்
ஈழநாதம்

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5510)

### தவறிவிட்டது

கொழும்பிலிருந்து வரும்போது நல்லூரில் படகில் பொருள்களை ஏற்றும்போது இரண்டு பிரயாணப்பை (மஞ்சள், நீலம்) ஒருகடவுச்சீட்டு, அடையாள அட்டை (இல. 721930262V) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வ. தியாகராஜா 54/8, ஆச்சிகுடி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3769)

### பற் சிகிச்சை நிலையம்

(எஸ். பி. சாமி அன்கோ கட்டிடம்) யாழ். பஸ் நிலையம்அருகில் பார்வையிடும் நேரம் தினசரி 12.00 ந.ப - 2.00 பி.ப. (3230)

### வாடிக்கையாளருக்கு

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றரிகளும் எம்மிடம் உண்டு டில்காவாச் & றேடியோ வேக்ஸ் தென்மராட்சியில்சகல வங்கிகளுக்கு அருகாமையிலும் எமது கிளைகள் உள்ளன. சாவகச்சேரி. (சி- 5560)

### அளவைகளுக்கு முத்திரையிடல்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் அளவை நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடல் வேலை இன்று முதல் 15 ஆம் திகதி வரை நடைபெறும். (யோ)

---

## Computer Programming In Basic Language

**4 MONTHS**

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: 12-12-1992

10-30 மணி

Lectures By:

S. P. SIVAPATHASUNDARAM

M. I. D. P. M. (Lond)

★ கட்டணம் தவணை முறையில்
★ அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

**LOTUS 1,2,3 புதிய பிரிவு**

21-12-92 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Pioneers in Computer Education)

16, 3 rd Cross Street,, Jaffna.

(சி-5561)

---

## மு/புதுக்குடியிருப்பு ப. நோ. கூ. சங்கம்,

(வரையுள்ளது)

## பதவி வெற்றிடங்கள்

(1) பொதுமுகாமையாளர், குறியீட்டு இல.115/8 (2) கணக்காளர், குறியீட்டு இல 104/10

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பம் முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. (சங்க எல்லைப்பரப்பில் வசிக்கும் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்). பின்வரும் தகைமையுடையவர்கள் தாமாகவே விண்ணப்பப் பத்திரங்களைத் தயாரித்து 1992 12. 25ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்போ "தலைவர், மு/புதுக்குடியிருப்பு ப. நோ. கூ. சங்கம், மு/புதுக்குடியிருப்பு" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

1) பொதுமுகாமையாளர்: குறியீட்டு இல. 115/8

கல்வித் தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 9-வது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10-வது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06 வருட அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன், அல்லது இதற்கு இணையான பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவம்,

---

கோண்டாவில், யாழ்ப்பாணம் (பி. எம். சி) நெல்லியடி அத்தியாவசிய சேவைகள் களஞ்சியங்களில் பொருள்களை லொறிகளில் இருந்து இறக்கி, நிறுத்து, அடுக்கி / நிறுத்து லொறிகளில் ஏற்றுவதற்கான

## கூறுவிலை கோரல்

கோண்டாவில், யாழ்ப்பாணம், நெல்லியடி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் களஞ்சியங்களில் 01-01-93 முதல், 31-12-93 வரையிலான காலத்திற்கு லொறிகள் மூலம் கொண்டுவரப்படும் அரிசி, மாவு, சீனி போன்ற உலர் உணவுப் பொருள்களை இறக்கி, நிறுத்து, அடுக்கி / நிறுத்து ஏற்றுவதற்கு பதிவு செய்யப்பட்ட தொழிலாளர் சங்கங்கள் / ப. நோ. கூ. சங்கங்கள் மற்றும் இதே போன்ற சங்கங்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

கூறுவிலைகள் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்டு. அரக்கு முத்திரையிடப்பட்டு, கடிதத்தில் இடப்பக்க மேல்மூலையில் "பொருள்களை இறக்கி, ஏற்றுவதற்கான கூறுவிலை" எனக் குறிப்பிடப்பட்டு 18-12-92 ஆம் திகதிக்கு முன்னர் எனது அலுவலகத்தில் கூறுவிலை கோரல் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

### மாதிரி கூறுவிலைகோரல் பட்டியல்

1. கூறுவிலை கோரும் சங்கத்தின் பெயர் ; ..............

2. நிரந்தர முகவரி ..............

| 3. சேவைகள் | மெ.தொன் ஒன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| (1) லொறி அடுக்கிலிருந்து இறக்கிக் கொண்டு சென்று நிறுத்து களஞ்சியத்தினுள் அடுக்கல். (தேவையானவிடத்து கழன்றிருக்கும் மூடைகளைத் தைக்க வேண்டியும் வரலாம்.) | |
| (2) களஞ்சிய அடுக்கிலிருந்து கொண்டு சென்று நிறுத்து லொறியினுள் ஏற்றி அடுக்கல். (தேவையானவிடத்து கழன்றிருப்பின் மூடைகளை தைக்கவேண்டியும்வரலாம்) | |

4 களஞ்சியத்திலுள்ள மேற்குறிப்பிடப்படாத சாதாரண களஞ்சியத் தொழிலாளர் வேலை

ஆண் தொழிலாளி நாளொன்றுக்கு .......... ரூபா

பெண் தொழிலாளி நாளொன்றுக்கு .......... ரூபா

..............................

கையொப்பம். ரப்பர் முத்திரை

திகதி : ..............

செ. பத்மநாதன்

திட்டப்பணிப்பாளர்,

யாழ். அரசாங்க அதிபருக்காக (சி/5527)

---

## நான்காம் ஆண்டின்

---

## உருளைக் கிழங்குச் செய்கை ஊக்குவிக்க முடிவு

வலிகாமத்தில் உருளைக் கிழங்குச் செய்கையை ஊக்குவிக்கும் முயற்சியில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டு தேங்கியுள்ள உருளைக்கிழங்குகள் உடுவில், சண்டிலிப்பாய், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

மேற்படி உதவி அரச அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட விவசாயிகள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் மேற்படி நிறுவனத்துடன் அல்லது உரும்பராய் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் உபதலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### சனி, ஞாயிறு தினங்களில் திறந்திருக்கும்

1992ம் ஆண்டு ஆனி, ஆடி, புரட்டாதிமாத மாணவர் மதிய உணவு முத்திரைகளுக்கான உலர் உணவுப் பொருட்கள் 12-12-92 முதல் யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கக் கிளைகள் மூலம் விநியோகிக்கப்பட உள்ளது இவ் விநியோகம் 21-12-92வரை நடைபெற உள்ளது இவ் விநியோகத்தை முன்னிட்டு சகல ப. நோ. கூ. சங்கக் கிளைகளும் இக்காலங்களில் சனி, ஞாயிறு தினங்களும் முழுமையாக திறந்திருக்கும் என இதன் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்

ஆனி மாத மாணவ முத்திரைக்கு அதன் பெறுமதிக்கேற்ப சீனி மட்டும் முழுமையாக விநியோகிக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது 17

### மண்ணெண்ணெய் விநியோகம்

ஊர்காவற்றுறைபலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் அதன் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட ஐந்து லீற்றர் மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் இன்று முதல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை பெற்றுக் கொள்ளலாம் என்று சங்கப் பொது முகாமையாளரின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 28 | 12 | 1960



வீரச்சாவு 10 | 12 | 1988

### லெப். கேணல் மதி

[சுப்பிரமணியம் பாலச்சந்திரன்]

கண்ணின் கருமணியாய்
காலமெல்லாம் காத்திருப்போம்
மண்ணின் விடுதலைக்காய்
மாவீரர் ஆன உம்மை
எண்ணி நாம் ஏற்றம் கொள்வோம்
எழிலான நம்தேசம் மீட்போம்.

புளியம்தோட்டம், சுன்னாகம்.

உமது அம்மா, அத்தான்மார், அக்காமார், அண்ணன், தம்பி, அண்ணிமார், மருமக்கள், மக்கள் மற்றும் உற்றார். உறவினர்

(சி-5559)

---

நினைவு ...

டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றரிகளும் எம்மிடம் உண்டு டில்காவாச் & றேடியோ வேக்ஸ் தென்மராட்சியில்சகல வங்கிகளுக்கு அருகாமையிலும் எமது கிளைகள் உள்ளன. சாவகச்சேரி. (சி- 5560)

## அளவைகளுக்கு முத்திரையிடல்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் அளவை நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடல் வேலை இன்று முதல் 15 ஆம் திகதி வரை நடைபெறும். (யோ)

## வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன

(கொழும்பு)

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள மக்கள் வங்கி கிளைகளில் காணப்படும் எழுதுவினைஞர் வெற்றிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நான்கு பேரும், மன்னார் மாவட்டத்துக்கு இருவரும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஆறுபேரும் எழுதுவினைஞர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்

## மரம் நாட்டல்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கிழக்குக் கரையோரப் பகுதிகளில் கடற்புலிகளினால் மரம் நாட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொண்டமானாறு முதல் வடமராட்சி கிழக்குப் பகுதி வரை கரையோரப் பகுதிகளில் மரங்கள் நாட்டப்படவுள்ளன. (யோ)

## கம்பு மா அறிமுகம்

அதிக விளைச்சலையும், இலகுவாகப் பயிரிடக் கூடியதுமான கம்பு தானியம் பற்றிமக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் கம்புமாவிலிருந்து பிட்டு, லட்டு, கூழி, கஞ்சி மற்றும் ஏனைய சிற்றுண்டி வகைகள் தயாரிக்கும் செய்முறை பயிற்சி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்பட்டு வருகின்றது. வலிகாமம் கோட்டம், தென்மராட்சி கோட்டம், தீவகக் கோட்டம் ஆகிய பகுதிகளில் கிராமிய உற்பத்திக் குழுக்களுடாக தெரிந்தெடுக்கப்பட்ட 24மகளிருக்கு செய்முறை பயிற்சியும் விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

றோ அல்லது இதற்கு முன்போ "தலைவர், மு/புதுக்குடியிருப்பு ப. நோ. கூ. சங்கம், மு/புதுக்குடியிருப்பு" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் தபால் உறையின் இடது பகக மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

### 1) பொதுமுகாமையாளர்: குறியீட்டு இல. 115/8

**கல்வித் தகைமைகள்:**

அ) கூட்டுறவுப் பணியாளரின் 9-வது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10-வது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06 வருட அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன், அல்லது இதற்கு இணையான பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவம்,

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர் தரம்) க பொ த. (உயர்தரம்) இல் 03 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

வயது: 23 தொடக்கம் 50க்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

பிணை: உரொக்கம் ரூ. 10,000/-.
உறுதிப்பிணை ரூ. 25,000/- பெறுமதி.

சம்பளத்திட்டம்: $\frac{1005 - 1705}{40x5 - 50x10}$ உடன் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சகல படிகளும் வழங்கப்படும்.

### 2) கணக்காளர்: குறியீட்டு இல 104/10

**கல்வித் தகைமைகள்:**

அ) கூட்டுறவுப் பணியாளரின் 11வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியில் ஆன 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது, கூட்டுறவுப் பணியாளரின் 12வது சம்பளத்திட்டத்திலான கணக்கு சம்பந்தமான பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது,

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்குத் துறையிலான 02 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்,

அல்லது,

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) க. பொ. த. (உயர்தரம்) இல் கணக்கியலை உள்ளடக்கிய மூன்று பாடங்களிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 02 வருடங்களிற்குக் குறையாத அனுபவம்.

வயது: 20 தொடக்கம் 35க்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

பிணை: உரொக்கம் ரூ. 5000/-

சம்பளத்திட்டம்: $\frac{855 - 1385}{30X7 - 40X8}$ உடன் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சகல படிகளும் வழங்கப்படும்.

1992- 12- 07

தலைவர்,
மு/ புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்
3762)


களை தைக்கவேண்டியும்வரலாம்)

| | | |
|---|---|---|
| 4 | களஞ்சியத்திலுள்ள மேற்குறிப்பிடப்படாத சாதாரண களஞ்சியத் தொழிலாளர் வேலை | |
| | ஆண் தொழிலாளி நாளொன்றுக்கு | .......... ரூபா |
| | பெண் தொழிலாளி நாளொன்றுக்கு | .......... ரூபா |

..............................................
கையொப்பம். ரப்பர் முத்திரை
திகதி : ..................................

செ. பத்மநாதன்
திட்டப்பணிப்பாளர்,
யாழ். அரசாங்க அதிபருக்காக (சி/5527)

## நான்காம் ஆண்டின் நீங்கா நினைவுகள்



### திருமதி த. மங்கயற்கண்ணி [தேவி]

மலர்வு 19. 07. 1964 — உதிர்வு 24. 11. 1988

(திதி:- 10. 12. 1992)

தென்றல் போல எங்கள் மீது வசந்தத்தை வீசியவளே
எங்கள் இதயங்களில் என்றும் ஒலிக்கும் இன்ப கீதமே
எங்கள் வாசலில் துயரத்தை வரவு வைத்து
நீ விழி மூடி நாலாண்டு ... நகர்ந்து விட்டதம்மா
ஆனால் இன்றும் உன் மரணத்தை எங்களால்
புரிந்து கொள்ளமுடியவில்லை காலம் தான்
எங்கள் கேள்விக்கு பதில் தரவேண்டும்
நீயில்லாத வெறுமையில் உன்நினைவுகளை சுமந்தபடி
உன்னோடுசேருமநாளுக்காக நாங்கள்காத்திருக்கின்றோம்

த. சிவசம்பு
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

இவரின் நினைவுகளை
நெஞ்சில் சுமக்கும்
பெற்றார், உடன் பிறப்புக்கள்,
உறவினர்கள்.

(3766)

1960  1988

## லெப். கேணல் மதி

[சுப்பிரமணியம் பாலச்சந்திரன்]

கண்ணின் கருமணியாய்
காலமெல்லாம் காத்திருப்போம்
மண்ணின் விடுதலைக்காய்
மாவீரர் ஆன உம்மை
எண்ணி நாம் ஏற்றம் கொள்வோம்
எழிலான நம்தேசம் மீட்போம்.

புளியம்தோட்டம்,
சுன்னாகம்.

உமது அம்மா, அத்தான்மார்,
அக்காமார், அண்ணன், தம்பி,
அண்ணிமார், மருமக்கள், மக்கள்
மற்றும் உற்றார். உறவினர்

(சி-5559)

## நினைவு கூருகின்றோம்...

### 1992-12-10

1984-ம் ஆண்டு இதேதினத்தில் கிளிநொச்சி - பூநகரி, சங்குப்பிட்டிப்பகுதில், சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

★ விக்ரர்/சுமித்திரன் (விக்ரரீடலீமா - பேசாலை- மன்னார்)

1985-ம் ஆண்டு, கிளிநொச்சி - கரடிப்போக்குப் பகுதியில் சிறிலங்கா இராணுவததினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

புள்ளி/ஜெயராம் [கந்தசாமி மோகனகாந்தன்- 32, மோகனகாந்தன் வீதி, கண்டிக்குளி - யாழ்]

1987-ம் ஆண்டு கனகம் புளியடிச்சந்தியில். இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

கீதன் (வே. திருக்கேதீஸ்வரன் மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி-யாழ்

1988-ம் ஆண்டு திருநெல்வேலியில் இந்தியப்படை மற்றும் ரெலோ தேசவிரோதிகளின் சுற்றிவளைப்பின் போது தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய-
யாழ்-மாவட்ட தளபதி

லெப், கேணல் மதி (சுப்பிரமணியம்பாலச்சந்திரன்- 'செல்வபவனம்' மல்லாகம், தெல்லிப்பழை கிழக்கு-யாழ்)

திருக்கோணமலை - மட்டப்புக்கழிப்பகுதியில், சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்-

1989-ம் ஆண்டு மன்னார்-தலைமன்னாரீப்பகுதியில், சிறிலங்கா கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட பெண்குழந்தை.

1990-ம் ஆண்டு, அம்பாறை-பக்கியெல்ல கிராமத்திலிருந்து புறப்பட்ட சிறிலங்கா ஊர்காவற்படையினரால், மட்டக்களப்பு- பாலையடிவெட்டைப்பகுதியில் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்ட பக்கியெல்ல,35-ம் கிராமம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 2- தமிழ் இளைஞர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5558]

நல்லூர் நூலகம்
யாழ்ப்பாணம்



### சிந்தனைக்கு

முதலில் தோன்றுவது போல சிறப்பாக முடிவில் எதுவுமே இருப்பதில்லை.

- ஜார்ஜ் எலியட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 10- 12- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2309
த. பெ. எண் - 05

# எதிர்க்கட்சிகளின் அவல நிலை

சிறிலங்கா எதிர்க்கட்சிகளின் இன்றைய நிலை பெரும் கவலை அளிப்பதாக உள்ளது 'சாண் ஏற முழம் சறுக்கும் என்பார்கள்' அதேபோன்று ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும், ஐக்கிய தேசிய கட்சிக்கும் எதிராக இவர்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பெரும் தோல்வியில் முடிவுறுகின்றன. இறுதியாக திருமதி லலி கொப்பேகடுவை மையமாக வைத்து நடத்தப்பட்ட நாடகமும் தோல்வியில் முடிந்துள்ளது என்றே கூறலாம்.

இதேவேளை, கொப்பேகடுவ விவகாரம் அரசியற் தோல்வியை மட்டும் இவ் எதிர்க்கட்சிகளுக்கு ஏற்படுத்தவில்லை. பெருத்த அவமானத்தையும் மூன்றாம்தர அரசியல்வாதிகள் என்ற பெயரையும் பெற்றுக் கொடுத்துள்ளது. இதனை திருமதி லலி கொப்பேகடுவவின் கடிதம் தெளிவாகக் காட்டுகின்றது.

"எனது அரசியல் அறியாமை காரணமாக எனது நோக்கம் அரசியல் சதுரங்கம் ஆடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது பற்றி நான் வருந்துகிறேன்" என திருமதி லலி கொப்பேகடுவ ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளமையும், லங்கா ஒப்ரேயில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு பற்றி முதலில் தனக்கு ஒன்றும் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளமையும், எதிர்க்கட்சிகள் அவரை ஓர் அரசியல் பகடைக்காயாக பயன்படுத்த முற்பட்டமையையே காட்டுவதாகவுள்ளது.

இதேவேளை, லெப். ஜெனரல் கொப்பேகடுவ மரணம் தொடர்பாக நடந்த அரசியல் சதுரங்கத்தில் திருமதி லலி கொப்பேகடுவ கூறுவது போல், தெரியாத்தனமாகச் சிக்கியிருப்பாரேயானால், திரு. பிரேமதாசாவிற்கு அவர் கடிதம் மூலம் மன்னிப்புக் கோரியமை நியாயமானதே. இதன் மூலம் ஓரளவேனும் தனதும், தனது கணவரதும்

# கொள்ளையில் ஈடுபட்ட இராணுவ சிப்பாய் கைது

(கொழும்பு)

பட்டப்பகலில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட இராணுவ சிப்பாய் உட்பட மூவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிவில் உடையில் காணப்பட்ட இந்த இராணுவ சிப்பாயும் ஏனையோரும் கொழும்பு கோட்டையில் உள்ள வங்கி ஒன்றின் முன்னால் இளைஞர் ஒருவரிடம் கொள்ளையடிக்கும் நோக்கில் இளைஞரைத் தாக்கித்துன்புறுத்தினர். அப்போது பொலிசார் இவர்களைக் கைது செய்தனர்.

# பிரச்சினைக்கு ஒரே தீர்வு சமஷ்டி முறையே

## -ஒலிபரப்புதுறை அமைச்சர்

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதியில் தொடர்ந்து வரும் போரை முடிவுக்கு கொண்டுவர சமஷ்டி முறையே ஒரே தீர்வு என தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா பாராளுமன்றத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், தொடர்ந்து கொண்டிருக்கும் போரை முடிவுக்கு கொண்டு வர சமஷ்டி முறையே ஒரு தீர்வாகும். நாம் விரும்புகின்றோமோ, இல்லையோ அது தான் உண்மை என்றும் குறிப்பிட்டார்.

# கொழும்புப் பயணிகள் மீது கெடுபிடிகள் அதிகரிப்பு

(வவுனியா)

வடபகுதியிலிருந்து வவுனியா ஊடாக கொழும்பு செல்லும் மக்கள் மீது வன்னிப் பொலிசார் தீவிர கண்காணிப்புச் செலுத்திவருகின்றனர். கொழும்பில் நடைபெறும் குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு இப் பகுதியூடாகவே மருந்துகள் சிறிது சிறிதாக எடுத்துச் செல்வதாகப் பொலிசார் நம்புவதே இத் தீவிர சோதனைக்குக் காரணம் என தெரியவருகிறது

தற்போது கொழும்பு செல்லும் பயணிகள் யாவரும் தாண்டிக்குளம் தடைமுகாமில் பெற்றுக்கொள்ளும் விசேட பாஸினை தம்முடன் எந்நேரமும் வைத்துக்கொள்ள வேண்டுமெனவும் கொழும்பில் இவர்கள் தங்கியுள்ள காலத்தில் பொலிசார் சோதனையிடும் போது அப் பாஸினை காட்ட வேண்டும் எனவும் அறிவுறுத்தி வருகின்றனர்.

இதேவேளையில் இவர்கள் கொழும்பு பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து கொள்ளும்போதும் அப்பாஸினை அங்கு காண்பிக்க வேண்டுமாம்.

# மட்டக்களப்புப் பகுதி கிராமங்களில் தேடுதல்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள களுதாவளை, பாண்டிருப்பு ஆகிய பகுதிகளில் சிறிலங்கா அதிரடிப்படையினர் நடாத்திய சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளின் போது பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மேற்படி பகுதிக்கு விரைந்து வந்த விசேட அதிரடிப் படையினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்தனர். பின்னர் வீடு வீடாகச் சென்று தீவிர சோதனை மேற்கொண்டனர் இவ் இரு கிராமங்களிலும் நடாத்தப்பட்ட தேடுதலின் போது பலர் கைது செய்யப்பட்டனர்.

களுதாவளையில் கைது செய்யப்பட்டவர்கள் களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமுக்கும், பாண்டிருப்புப் பகுதியில் கைது செய்யப்பட்டவர்கள் துறைநீலாவணை அதிரடிப்படை முகாமுக்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

அதேவேளை கடந்த சனிக்கிழமை காலை ஊறணிக்கிராமத்தை விசேட அதிரடிப்படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தினர். இத் தேடுதலின் போதும் பலர் கைது செய்யப்பட்டனர்.

# திருமலை அகதி முகாமில் இராணுவத்தினர் தொல்லை

(வவுனியா)

திருக்கோணமலையில் இந்தியாவிலிருந்து திரும்பி வந்த அகதி மக்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் முகாம்களில் சிறிலங்கா இராணுவம் தேடுதல் வேட்டையில் ஈடுபடுகின்றது. பல அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத்தின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று அம் முகாம்களிலிருந்து வவுனியா வந்து சேர்ந்த அகதி மக்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இராணுவம் அற்ற பிரதேசங்களைச் சேர்ந்த அகதி மக்கள் திருக்கோணமலை அகதி முகாம்களிலிருந்து சுயவிருப்பத்தில் வவுனியா வந்து சேர்ந்தனர்.

இவர்கள் திருமலை அகதி முகாம்களின் நிலையை வேதனையுடன் வெளிப்படுத்தினர்.

யூ. என். எச் சீ. ஆர் நிறுவனத்தின் பராமரிப்பில் இம் முகாம்கள் உள்ள போதிலும் இராணுவம் மற்றும் ஏனைய அரசாங்க சார்பு குழுக்களின் தொல்லை அங்கு அதிகரித்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

பொலிஸாரின் பாதுகாப்பில் இந்த முகாம்கள் உள்ள போதிலும் திடீர் திடீர் என்று பாய்ந்து வரும் இராணுவத்தினர் அகதி மக்களை மிரட்டுவதாகவும் துன்புறுத்துவதாகவும் குறிப்பிட்டனர்.

பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா பொலிஸார் இரவு வேளைகளில் மது போதையில் அகதிகளைக் தொல்லைப்படுத்துவதாகவும் கூறினார்கள்.

இராணுவம் அற்ற பகுதிகளில் மீளச்சென்று குடியமர விருப்பப்படுவோருக்கு அரசின் உதவிப்பணம் அறவே வழங்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர் [தி]

## ஊர்காவற்படையால் சித்திரவதை

(வவுனியா)

மன்னார் பெரியநோணி பகுதியில் முஸ்லிம் ஊர்காவற்படையினரால் பிடிக்கப்பட்ட இரண்டு தமிழர்கள் மூன்று மாத சித்திரவதைக்குப் பின்னர் கடந்த 7ஆம் திகதி அனுராதபுரத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த செப்டெம்பர் மாதம் மிருக வேட்டைக்கு இந்த இருவர்களும் சென்ற சமயம் காட்டில் வைத்து கைது செய்த ஊர்காவற்படையினர் புத்தளம் ஊடாக அனுராதபுரம் பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைத்தனர்.

அனுராதபுரம் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவரும் கடும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

சூ. இசிதோர் (52), ச. சந்தான் (37) ஆகிய மேற்படி இருவரும் பரிகாரிகண்டல் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

# மிகுதி வினாத்தாள்களும் நேற்று வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குரிய மிகுதி வினாத்தாள்கள் முழுவதும் நேற்று யாழ் கல்வித்திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஐந்துநாட்களுக்குரிய பரீட்சையின் வினாத்தாள்கள் எடுத்து வரப்பட்டிருந்தன. தற்போது மிகுதி ஆறுநாட்களுக்குமுரிய பரீட்சையின் வினாத்தாள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் பலாலிக்கு எடுத்து வரப்பட்ட இவ் வினாத்தாள்கள் நேற்றுக் காங்கேசன்துறையூடாக "மெரினால்" கப்பல்மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்டு அங்கிருந்து யாழ் கல்வித் திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது. (பா)

# உற்பத்தித்திறன் நன்கொடை வழங்க ஏற்பாடு

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்தவர்களது உற்பத்தித் திறன் நன்கொடை நாலாயிரம் ரூபா, பருத்தித்துறை இலங்கை வங்கிக்கு அனுப்பப்பட்டு இது வரை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை கரவெட்டி பிரதேச செயலகத்தில் யாழ். புனர்வாழ்வுக் கிளையினால் வழங்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சுமார் 200 பேருக்கு இப்பணம் வழங்கப்படுவதோடு, கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் இராணுவ நடவடிக்கையால் பாதிப்படைந்துள்ளவர்களுக்கும் நிவாரணமும் உற்பத்தித் திறன் நன்கொடையும் பெறத் தகுதியானவர்களுக்கு வழங்கப்படவுள்ளது

சம்பந்தப்பட்டவர்களுக்கு நிவாரணமும் நன்கொடையும் வழங்கவென மேற்குறித்த திகதியில் யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு பத்மநாதன் தலைமையில் புனர்வாழ்வுப் பிரிவுக் குழுவொன்று கரவெட்டி பிரதேச செயலகத்தில் இயங்கும். (யோ)

# இடமாற்றம் தொடர்பாய் மேன்முறையீட்டுக்கு அவகாசம்

(கொழும்பு)

அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கான அடுத்த ஆண்டுக்கான இடமாற்ற உத்தரவுகள் தொடர்பாக மேன்முறையீடு செய்வதற்கு மேலதிக அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இடமாற்ற உத்தரவுகள் ஏற்கனவே ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# வகுப்புகள் ஆரம்பம்

அரியாலை சிறிபார்வதி வித்தியாசாலையில் இந்திரன் கல்விவளர்ச்சிக் கழகத்தினால் நடத்தப்படும் இலவச வகுப்புகள் நேற்று மாலை மூன்று மணிக்கு மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. ஆறாம் ஆண்டு தொடக்கம், 11 ஆம் ஆண்டு வரையிலான வகுப்புகள் நடத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## அயோத்தி சம்பவம் பற்றி

"எனது அரசியல் அறியாமை காரணமாக எனது நோக்கம் அரசியல் சதுரங்கம் ஆடுவதற்குப் பயன் படுத்தப்பட்டது பற்றி நான் வருந்துகிறேன்" என திருமதி லலி கொப்பேகடுவ ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளமையும், லங்கா ஒப்ரேயில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு பற்றி முதலில் தனக்கு ஒன்றும் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளமையும், எதிர்க்கட்சிகள் அவரை ஓர் அரசியல் பகடைக்காயாக பயன் படுத்த முற்பட்டமையையே காட்டுவதாகவுள்ளது.

இதேவேளை, லெப். ஜெனரல் கொப்பேகடுவ மரணம் தொடர்பாக நடந்த அரசியல் சதுரங்கத்தில் திருமதி லலி கொப்பேகடுவ கூறுவது போல், தெரியாத்தனமாகச் சிக்கியிருப்பாரேயானால், திரு. பிரேமதாசாவிற்கு அவர் கடிதம் மூலம் மன்னிப்புக் கோரியமை நியாயமானதே. இதன் மூலம் ஓரளவேனும் தனதும், தனது கணவரதும் 'புகழைப்' பாதுகாத்துள்ளார் என்றே கூறலாம். அவ்வாறு இல்லாமல் தனது கணவரின் மரணத்தின் மூலம் அரசியலில் பிரவேசிக்க எடுத்த முயற்சி ஆட்டம் காணும் நிலையில் அவர் தந்திரமாகத் தப்பித்துக்கொள்ள இவ்வாறு முயற்சித்திருப்பாரேயானால் அது ஒருவகையில் மோசடியே யாகும்.

இதில், எதுவாக இருந்தாலும் சரிதான் திருமதி லலி கொப்பேகடுவ எதிர்கட்சிகளுக்கு பெரும் சேதத்தையும், பலத்த ஏமாற்றத்தையும் ஏற்படுத்தி விட்டார் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பலத்த பின்னணியில் உள்ள திருமதி லலிகொப்பேகடுவ இவ்வாறு பிரேமதாசாவிடம் மன்னிப்புக் கோருவார் என எதிர்கட்சியினர் எதிர்பார்த்திருக்க முடியாததுதான்.

எதிர்கட்சியினர், கடந்த வருடத்தின் மத்தியிலும் திரு. பிரேமதாசாவிற்கு எதிராக இவ்வாறான தொரு முயற்சியில் ஈடுபட்டனர். அப்போது பிரேமதாசவிற்கு எதிராக 'குற்றவிசாரணை கோரும்' மனு ஒன்றையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தனர். மிகவும் இரகசியமாக நடைபெற்ற இந்நடவடிக்கை ஓர் 'ஜனநாயகச்சதி' என்றும் கூறலாம்.

அதிலும், எதிர்கட்சியினர் தோல்வியே கண்டனர். இவர்களின் இத்தோல்விக்கு சபாநாயகர் எம். எச். முகமட் நடந்து கொண்ட முன்னுக்குப்பின் முரணான நடவடிக்கையே பிரதான காரணம் எனத்தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும் எதிர்க்கட்சிகள் திரு. பிரேமதாசாவை ஆட்சியில் இருந்து கவிழ்ப்பதற்குக் கையாண்ட 'ஒரு வகை சதி' தோல்வி கண்டது என்றே சொல்லலாம்.

எதிர்க்கட்சிகளின் இவ்வாறான நடவடிக்கைகளை நோக்கும்போது அவை, 'ஜனநாயக வழிமுறையில்' நம்பிக்கை இழந்து விட்டனவா? அன்றி தேர்தலில் நமது வெற்றி குறித்து நம்பிக்கை இழந்து விட்டார்களா? என்றே எண்ண வைக்கின்றது. அதேவேளை, எதிர்க்கட்சியினர் எதிர்கால அரசியல் குறித்து தெளிவான திட்டமோ அன்றி குறிக்கோளோ கொண்டிருக்கவில்லை என்பதும் புலனாகிறது.

## கிராமங்களில் தேடுதல்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள களுதாவளை, பாண்டிருப்பு ஆகிய பகுதிகளில் சிறிலங்கா அதிரடிப்படையினர் நடாத்திய சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளின் போது பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மேற்படி பகுதிக்கு விரைந்து வந்த விசேட அதிரடிப் படையினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்தனர். பின்னர் வீடு வீடாகச் சென்று தீவிர சோதனை மேற்கொண்டனர் இவ் இரு கிராமங்களிலும் நடாத்தப்பட்ட தேடுதலின் போது பலர் கைது செய்யப்பட்டனர்.

களுதாவளையில் கைது செய்யப்பட்டவர்கள் களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமுக்கும், பாண்டிருப்புப் பகுதியில் கைது செய்யப்பட்டவர்கள் துறைநீலாவணை அதிரடிப்படை முகாமுக்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

அதேவேளை கடந்த சனிக்கிழமை காலை ஊறணிக்கிராமத்தை விசேட அதிரடிப்படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தினர். இத் தேடுதலின் போதும் பலர் கைது செய்யப்பட்டனர்.

சித்திரவதைக்கு உட்படுத்தப் பட்ட பின்னர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

சு. இசிதோர் (52), ச சந்தான் (37) ஆகிய மேற்படி இருவரும் பரிகாரிகண்டல் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

பிரதேச செயலகத்தில் யாழ். புனர்வாழ்வுக் கிளையினால் வழங்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சுமார் 200 பேருக்கு இப்பணம் வழங்கப்படுவதோடு, கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் இராமிடல் பணிப்பாளர் திரு பத்மநாதன் தலைமையில் புனர்வாழ்வுப் பிரிவுக் குழுவொன்று கரவெட்டி பிரதேச செயலகத்தில் இயங்கும். (யோ)

## இடமாற்றம் தொடர்பாய் மேன்முறையீட்டுக்கு அவகாசம்

(கொழும்பு)

அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கான அடுத்த ஆண்டுக்கான இடமாற்ற உத்தரவுகள் தொடர்பாக மேன்முறையீடு செய்வதற்கு மேலதிக அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இடமாற்ற உத்தரவுகள் ஏற்கனவே ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## வகுப்புகள் ஆரம்பம்

அரியாலை சிறிபார்வதி வித்தியாசாலையில் இந்திரன் கல்விவளர்ச்சிக் கழகத்தினால் நடத்தப்படும் இலவச வகுப்புகள் நேற்று மாலை மூன்று மணிக்கு மீண்டும் ஆரம்பமாகியுள்ளது ஆறாம் ஆண்டு தொடக்கம், 11 ஆம் ஆண்டு வரையிலான வகுப்புகள் நடத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## அயோத்தி சம்பவம் பற்றி ஆராய கமிஷன் நியமனமாகும்

(டில்லி)

அயோத்தி சம்பவங்கள் பற்றி விசாரிக்க அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையிலான விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப் படும் என்று இந்திரா காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசிய பிரதமர் பி வி. நரசிம்மராவ் கூறினார்

அத்துடன் உத்தரப்பிரதேச முன்னாள் முதல்வர் கல்யாண் சிங் மீது விசாரணை நடத்தப்பட இருப்பதாகவும், வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

## அரசின் நடவடிக்கைக்கு அத்வானி கண்டனம்

(டில்லி)

அயோத்தி பாபர் மசூதி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானி தமது கைது நடவடிக்கையைக் கண்டித்துள்ளார்.

மேலும் பாபர் மசூதி இருந்த இடத்தில் மத்திய அரசு பாபர் மசூதியைப் புதிதாக கட்டி எழுப்பும் திட்டத்தையும் அத்வானி கண்டித்தார். தனது கட்சி அரசின் இந்தத் திட்டத்தை ஏற்காது என்றும் அவர் சொன்னார்.

## வன்முறைச் சம்பவங்களால் உயிரிழப்பு மேலும் அதிகரிப்பு

[டில்லி]

அயோத்தி சம்பவங்களுக்குப் பின்னர் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை கர்நாடகத்தில் மட்டும் முப்பத்தி ஒன்றாக உயர்ந்துள்ளது. காயமடைந்திருந்த பதினைந்து பேர் நேற்று முன்தினம் மரணமடைந்ததை தொடர்ந்து முப்பத்தியொரு பேராக உயர்ந்துள்ளது. இதேவேளை பெங்களூர், ஹுப்ளி, பீதர், குல்பர்கா பகுதிகளில் தொடர்ந்தும் பதற்றம் நிலவுவதாகவும் அங்கு ஊரடங்கு அமுல் படுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை உயிரிழந்தோர் எண்ணிக்கை குஜராத்தில் எழுபத்தொன்றாகவும், மகாராஷ்டிராவில் தொண்ணூற்று ஐந்து ஆகவும் மத்திய பிரதேசத்தில் முப்பத்தாறு ஆகவும் உயர்வடைந்திருப்பதாக கூறப்படுகிறது.

## வன்செயல் பரவுவதை தடுக்க உள்துறை அமைச்சர் பணிப்பு

(டில்லி)

அயோத்தி சம்பவத்தைத் தொடர்ந்து மேலும் வன்செயல் பரவுவதை தடுக்கும் நடவடிக்கைகளை உடன் எடுக்கும்படி, மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் எல்லா மாநில முதல்வர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை வகுப்புவாத அமைப்புக்களைத் தடைசெய்வதற்கான சட்டங்கள் மற்றும் இதர வழிமுறைகள் பற்றி உள்துறை அமைச்சு ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

# டாக்கா சார்க் உச்சிமாநாடு ஒரு மாதத்திற்கு ஒத்திவைப்பு

(டாக்கா)

சார்க் உச்சிமாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இம்மாநாடு 13ஆம் திகதி பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற இருந்தது.

டாக்காவுக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய வெளியுறவுச் செயலர் ஜே. என். டிக்ஷிற் மாநாட்டை ஒத்தி வைப்பதையே பங்களாதேஷ் அரசு விரும்புகிறது என்று புதுடில்லிக்குத் தாவல் கொடுத்திருக்கிறார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் உள்நாட்டில் தோன்றியுள்ள நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் விதத்தில் அங்கேயே தங்கிஇருக்க வேண்டியிருப்பதால் தெற்காசியப் பிராந்திய நாடுகளின் தலைவர்கள் டாக்காவில் சந்திக்கும் உச்சி மாநாடு ஒரு மாதம் ஒத்திப் போடப்பட்டுள்ளது இதனால் நேற்று முன்தினம் புதுடில்லியில் ஆரம்பமாக இருந்த வெளியுறவு அதிகாரிகள் நிலையிலான பேச்சுக்களும் ஆரம்பமாகவில்லை.

இதேவேளை பிராந்தியத்தில் தோன்றியிருக்கும் வகுப்புவாத மோதல்களையும், சமயப் பூசல்களையும் சார்க் தலைவர்கள் ஒன்றுபட்டு நின்று எதிர்க்க வேண்டுமென தற்போதைய சார்க் தலைவரான பிரேமதாசா கேட்டுக் கொண்டுள்ளார். சார்க் அமைப்பின் தலைவர்களுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் அவர் மேலும் குறிப்பிடுகையில், அயோத்தி விவகாரம் தொடர்பாக பிரதமர் நரசிம்மராவின் கொள்கை நிலைப்பாட்டிற்கு ஆதரவும் தெரிவித்துள்ளார்.

## இந்தியப் பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைப்பு

பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது தொகுதிகளைச் சென்று பார்ப்பதற்கு வசதியாக பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பாராளுமன்றம் கூடியபோது பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டதை தொடர்ந்து சபையை சபைத்தலைவர் சிவராஜ் பாட்டீல் பதினாறாம் திகதி வரை ஒத்திப்போடுவதாகத் தெரிவித்தார். ஜனதாதளம் மற்றும் இடதுசாரிக் கட்சிகள் இந்த அறிவிப்பை வரவேற்ற போதும் பாரதீய ஜனதாக் கட்சி எதிர்ப்பு தெரிவித்தது.

ராஜ்ய சபாவிலும் நேற்று மூன்றாவது நாளாகவும் கூச்சலும் குழப்பமும் நிலவியதால் மத்தியானம்வரை ஒத்தி வைக்கப்பட்டது.

## பாகிஸ்தானில் இந்திய தூதரக அதிகாரியின் வீடு தீக்கிரை; சொத்துக்கள் சூறையாடப்பட்டன

(டில்லி)

கராச்சியில் இருக்கும் இந்தியாவின் கன்சலேட் அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் இல்லங்களின் மீது அழிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதாகவும், அதைத் தொடர்ந்து அவர்களது குடும்ப உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டதாகவும் புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன்சலேட் ஜெனரலின் இல்லம் தீயிடப்பட்டதாகவும், சொத்துக்கள் சூறையாடப் பட்டதாகவும் கூறப்படுகிறது. இதையடுத்து இவ் அலுவலகத்தில் பணியாற்றும் அதிகாரிகளின் குடும்ப உறுப்பினர்களான 46 பெண்களும் 72 குழந்தைகளும் இந்தியாவிற்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பாகிஸ்தானில் இந்திய இராஜ்யத்துறை அதிகாரிகள் கடந்த இருதினங்களில் மோசமாக நடத்தப்பட்டதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஆர். எல். பாட்டியா கூறியுள்ளார்.

அத்துடன் பாகிஸ்தானிலுள்ள இந்தியத் தூதுவராலயங்களுக்கு பாதுபாப்பு தருமாறும், எல்லாவித அழிவு நடவடிக்கைகளும் கைவிடப்பட வேண்டுமென்றும் இந்திய அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

ஈழநாதம்

# சினிமா நட்சத்திர அரசியலை ஒழித்துக் கட்டுவதே நோக்கம்

## -சுப்பிரமணியம் சுவாமி

தமிழ் நாட்டில் சினிமா நட்சத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட அரசியலை ஒழித்துக்கட்டி நல்லதோர் அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தவதே தமிழகநல்லாட்சி இயக்கத்தின் நோக்கம் என சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் ஆட்சியை அகற்றி தமிழ் நாட்டில் ''நல்லாட்சியை'' ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு ஜெயலலிதா அதிருப்தியாளர்களை ஒன்றிணைத்து தமிழக நல்லாட்சி இயக்கம் என்றோர் அமைப்பை சுப்பிரமணியம் சுவாமி ஆரம்பித்துள்ளமை தெரிந்ததே.

''எனது அடுத்த இலக்கு பீகார் மாநில முதலமைச்சர் லல்லு பிரசாத்யாதவ்'' என அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் தனது 'பணி' முடிந்ததும் தான் அங்கு செல்லவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எந்த

சந்திரசேகர் கூறினார்.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானிக்கு லோக்சபாவில் விளக்கம் தர வாய்ப்புத் தராமல் அவசரப்பட்டு அவரைக் கைது செய்திருக்கக்கூடாது என்றும் அவர் கூறினார். மேலும் அயோத்தி சம்பவம் தொடர்பாக முதலில் செயலற்று இருந்ததற்கும், பிறகு கூடுதலாகச் செயற்பட்டதற்கும் பிரதமமந்திரி பதவி விலக வேண்டும் என சந்திரசேகர் தெரிவித்தார்.

திறந்த

அதிபரையும், சர்வதேச செஞ்சிலுவை சங்க அதிகாரிகளையும் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைகளை நிறைவேற்ற தொடர்ச்சியாக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய நிலைய மாணவர் நலன்புரி அமைப்பினால் கொக்குவிலிலுள்ள பிராந்திய நிலையத்தில் நடைபெற்ற மாணவர்களின் கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்

## எட்டு மத கட்டடங்கள் லண்டனில் தீவைப்பு

(லண்டன்)

பிரிட்டனில் நேற்று எட்டு மதக்கட்டடங்கள்தாக்கப்பட்டு தீயிடப்பட்டன. இது குறித்துப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அயோத்தியில் பாபர் மசூதி தாக்கப்பட்டதின் எதிரொலியாக இவை நடந்துள்ளன.

கடைசியாக இடம் பெற்ற தாக்குதல்களில் ஆறு இந்துக் கலாசாரக் கட்டடங்கள், கோயில்கள் ஆகியவற்றில் தீ மூட்டப்பட்டது. முதல் முறையாகச் சீக்கியர் மற்றும் முஸ்லிம்களின் கட்டடங்களும் தாக்குதலுக்கு உள்ளாயின.

இந்தத் தாக்குதல் அனைத்திலும் முஸ்லிம்கள் ஈடுபட்டனரா என்பது சந்தேகமாக உள்ளது என்றும். வலதுசாரித் தீவிர வாதிகளின் தூண்டுதலின் பேரில் சிலர் இந்தத் தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டிருக்கலாம் என்றும் இன சமத்துவக் குழுத் தலைவர் அகமெட் கூறினார்.

விமானம்

இது இவ்வாறு இருக்க, குடா நாட்டின் வான் பரப்பில் பலாலி விமான நிலையத்திற்கும் தென்பகுதிக்கிடையேயும் அடிக்கடி பல விமானங்கள் மாறிமாறி பறந்து திரிந்த வண்ணமிருந்தன. மேலும் நேற்றுமாலை நான்கு மணியளவில் வந்த உலங்குவானூர்தி ஒன்றும் யாழ். குடா நாட்டின் கரையோரப் பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றுள்ளது.

இலவசக்

தினை அரசு நிறுத்துமாக இருந்தால் எமது மாணவர்களின் கல்வித்தரம் மேலும் வீழ்ச்சியடையும். வசதிபடைத்தவர்கள் மட்டுமே கல்வி கற்கக் கூடிய நிலை ஏற்படும். இதனைஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்றார்.

25 இந்துக்கள்

அத்துடன் 50க்கு மேற்பட்ட கோவில்கள் முஸ்லிம்களால் சேதமாக்கப்பட்டதாகவும் பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் நிலைமையை கட்டுக்குள் கொண்டு

## பௌத்த குழுவை சந்தித்தார்

(கொழும்பு)

கன்ரபரி அதமேற்றிராணியார் அதிவணக்கத்திற்குரிய ஜோர்ஜ் லெனோட் ஹோர்ரே பௌத்த தூதுக் குழுவொன்றை சந்தித்துள்ளார்.

## ''குமாரி'' வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டிற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் ''குமாரி'' கப்பல் காங்கேசன்துறையில் தரித்து நிற்கின்றது எனயாழ். செயலகம் தெரிவித்துள்ளது.

''மெரினால்'' கப்பல் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடிந்ததும் ''குமாரி'' கப்பல் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கும் என தெரிய வருகின்றது. (பா)

ஐ. நா.

வார்கள் என எதிர்பார்க்கப்

## ரஷ்சிய ஹெலி கொள்வனவு

ரஷ்யாவிடமிருந்து எம். ஐ. 7 ரக யுத்த ஹெலி கொப்டர்களை வாங்க சிறிலங்கா அரசாங்கம் எண்ணியுள்ளதாகக் கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கென சிறிலங்கா அரசாங்கத்தால் கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராணுவத்தின்

விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல் முடிந்து பல மணிநேரத்தின் பின்னர் தான் எமக்கு உதவும் பொருட்டு வாகனங்களோ, உயர் அதிகாரிகளோ வருகின்றனர் பங்கரில் உள்ள ஒருவர் தாக்கப்பட்டு மற்றவர் இறந்தால் காயமடைந்தவர் இரத்தப் பெருக்கெடுத்து சாகவேண்டியதுதான் உடனடியாகமருத்துவ வசதி இன்றி பல இராணுவத்தினர் இறந்துள்ளார்கள்.

பங்கர்களுக்கு போதிய அளவு பாதுகாப்பு படையினரை நியமிக்க ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளது. பாரிய உயிர் இழப்புக்களை படையினர் அண்மை வாரங்களின் சந்தித்துள்ளனர். இதனை கண்ணெதிரே பார்த்தவர்கள் தொடர்ந்து கடமைக்கு செல்ல தயக்கம் காட்டுகின்றனர்.

நீண்ட காலமாக யுத்தம் தொடர்ந்து நடைபெறுவதால் பாதுகாப்பு படையினர்முகாம்களில் முடங்கி உள்ளனர். பயப்பீதியின் மேலீட்டால் பங்கர்களை தஞ்சம் என இருப்பவர்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த உளவியல் ரீதியான தாக்கம் மனோரீதியான வியாதிகளை உருவாக்கியுள்ளன.

சில உயர் அதிகாரிகள் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கின்றனர். இதனால் பல கஷ்டங்களை சாதாரண சிப்பாய்கள் தான் அனுபவிக்க வேண்டியுள்ளது. உயர் அதிகாரிகள் முகாமினுள் பலவசதிகளை அனுபவிக்கின்றனர்.

இதனால் பயிற்சி பெற்ற பல படை வீரர்கள் ஓட்டம் எடுக்கின்றார்கள். ஆனால் பயிற்சி இல்லாத படையினருடன் தொடர்ந்து யுத்தம்மேற்கொள்ள முடியாது என்றும் படையினர் தெரிவித்துள்ளனர்

வர்த்தக

வும் இன்னும் பொலிஸ் விசாரணை நடைபெறுவதாகவும் இவர்கள் மேற்கு ஐரோப்பிய நாடு செல்வதற்கு சுமார் 2 லட்சம் தொடக்கம் 5லட்சம் ரூபா வரை பணத்தைச் செலவிட்டதாகவும் இதற்கு பின்னணியில் பல உயர் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் செயல்படுவதாகவும் தெரிவித்தார்.

சென்ற வெள்ளிக்கிழமை லண்டன் செல்ல இருந்த தமிழ் யுவதி ஒருவரை விமான நிலையத்தில் விசாரித்த போது பல முக்கிய தகவல்கள் கிடைக்கப் பெற்றது என்றும் அதனை தொடர்ந்து பலரை இது தொடர்பாகக் கைது செய்யக்கூடியதாக இருக்கும் என்றும் அவ் அதிகாரி கூறினார்.

அகதி முகாம்

தின் போது விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் வலியுறுத்தியுள்ளனர்,

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த மேற்படி உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர். இப்பேச்சுவார்த்தையின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் திரு. அன்ரன் பாலசிங்கம், திரு. பாலகுமாரன் மற்றும் திரு. யோகரத்தினம் யோகி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின்போது இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று இயல்பான வாழ்க்கையை மேற் கொள்வதற்கு ஏற்ற வகையில் இந்த நிவாரணத்திட்டங்கள் அமைய வேண்டும் எனவும் யுத்தம் ஒரு முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு சமாதான சகவாழ்வு திரும்பிய பின்னரே வெளி நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ள மக்கள் திருப்பி அனுப்பப்படல் வேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் எடுத்துரைத்தனர்.

## மரண அறிவித்தல்



யு
னி
வே
ர்
ச

ந்ததற்கும், பிறகு கூடுதலாகச் செயற்பட்டதற்கும் பிரதம மந்திரி பதவி விலக வேண்டும் என சந்திரசேகர் தெரிவித்தார்.

### திறந்த

அதிபரையும், சர்வதேச செஞ்சிலுவை சங்க அதிகாரிகளையும கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைகளை நிறைவேற்ற தொடர்ச்சியாக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய நிலைய மாணவர் நலன்புரி அமைப்பினால் கொக்குவிலிலுள்ள பிராந்திய நிலையத்தில் நடைபெற்ற மாணவர்கள் கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. மாணவர் நலன்புரி அமைப்பின் நிர்வாகமும் சீரமைப்பு செய்யப்பட்டது. (20)

நாட்டின் கரையோரப் பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றுள்ளது.

### இலவசக்

தினை அரசு நிறுத்துமாக இருந்தால் எமது மாணவர்களின் கல்வித்தரம் மேலும் வீழ்ச்சியடையும். வசதிபடைத்தவர்கள் மட்டுமே கல்வி கற்கக் கூடிய நிலை ஏற்படும். இதனை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்றார்.

### 25 இந்துக்கள்

அத்துடன் 50க்கு மேற்பட்ட கோவில்கள் முஸ்லிம்களால் சேதமாக்கப்பட்டதாகவும் பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர பரா இராணுவத்தினர் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புலிகளின் குரல்

# வெற்றிடங்கள்

புலிகளின் குரல் வானொலி நிலையத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பிரதம செய்தித் தொகுப்பாளர்
   - ★ தினசரிப் பத்திரிகை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றிய அனுபவம் அல்லது இதற்குச் சமனான அனுபவம்.
   - ★ செய்தி தொகுப்பதில் நீண்டகால அனுபவம்
2. நிகழ்ச்சி அமைப்பாளர்
   - ★ கலை, இலக்கியத் துறையில் நீண்டகால ஈடுபாடு.
   - ★ இசைத் துறையில் நீண்டகால ஈடுபாடு.
3. மொழி பெயர்ப்பாளர்
   - ★ ஆங்கில நூல்கள், பத்திரிகைகளை தமிழாக்கம் செய்யும் திறமை
   - ★ சிங்கள மொழி அறிவு மேலதிக தகுதியாக கருதப்படும்.
4. வாத்தியக் கலைஞர்கள்
   - ★ வானொலி நிகழ்ச்சிகளிலும், இசைப்பாடல்களிலும் வாத்தியங்கள் வாசிப்பதற்குரிய திறமை.
   - ★ நீண்டகால அனுபவம்.

ஆரம்ப வேதனம்:

ரூபா 2,500/- இலிருந்து 4,500/- வரை அனுபவம் தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தங்களது சுய விபரத்துடனான விண்ணப்பங்களை 1992 - 12 - 15-ம் திகதியன்றோ அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

பொறுப்பாளர்
புலிகளின் குரல்
திருநெல்வேலி

(சி-5551)

ன்றை சந்தித்துள்ளார்.

## "குமாரி" வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டிற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் "குமாரி" கப்பல் காங்கேசன் துறையில் தரித்து நிற்கின்றது என யாழ். செயலகம் தெரிவித்துள்ளது.

"மெரினால்" கப்பல் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடிந்ததும் "குமாரி" கப்பல் பருத்தித் துறையில் பொருள்களை இறக்கும் என தெரிய வருகின்றது. (பா)

### ஐ. நா.

வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்கள் அடுத்த மாத இறுதியில் மீண்டும் யாழ்ப்பாணம் வரலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### கொழும்பில்

நிருள் வந்து தங்கியிருந்தவர்கள் எனவும் இவர்கள் பொலிஸ் நிலையங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்யவில்லை எனவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன.

### மதக்

யாகினர்.

குஜராத் மாநிலத்திலும் பதற்றம் நிலவுகிறது. சௌராஸ்டிரா மாவட்டத்தில் ஹறிமாதி நகரில் நேற்றுக் காலை நடந்த வன்செயல்களைத் தொடர்ந்து ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அஹமதாபாத் நகரில் கும்பல்களைக் கலைப்பதற்கு பொலிசார் பலமுறை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இங்கு 20 பேர் உயிருடன் கொளுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுறது.

ஆந்திரப் பிரதேசத்தில் நலகொண்டா நகரில் காலவரையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அஸாமில் 144 - சட்டத்தின் கீழ் கண்டதும் சுடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பம்பாய் நகரில் மேலும் பல இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடந்ததைத் தொடர்ந்து ஊரடங்கு போடப்பட்டுள்ளது.

இங்கு 100க்கும் அதிகமானோர் பலியாகினர் ராஜஸ்தானில் கோட்டா நகரிலும், மல்பராவிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் காலவரையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரிஸ்ஸாவில் நிலைமை பதற்றமாக உள்ளது. தலைநகர் கட்டாக்கில் ஊர்வலத்தைக் கலைப்பதற்கு பொலிசார் வானை நோக்கிச்சுட்டுக் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர்.


கஷ்டங்களை சாதாரண சிப்பாய்கள் தான் அனுபவிக்க வேண்டியுள்ளது. உயர் அதிகாரிகள் முகாமினுள் பலவசதிகளை அனுபவிக்கின்றனர்.

இதனால் பயிற்சி பெற்ற பல படைவீரர்கள் ஓட்டம் எடுக்கின்றார்கள். ஆனால் பயிற்சி இல்லாத படையினருடன் தொடர்ந்து யுத்தம்மேற்கொள்ள முடியாது என்றும் படையினர் தெரிவித்துள்ளனர்

வாழ்க்கையை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் இந்த நிவாரணத்திட்டங்கள் அமைய வேண்டும் எனவும் யுத்தம் ஒரு முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு சமாதான சகவாழ்வு திரும்பிய பின்னரே வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ள மக்கள் திருப்பி அனுப்பப்படல் வேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் எடுத்துரைத்தனர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்: 1-6-1902



மறைவு 8-12-1992

### சூசை அருளப்பு

பாஷையூரைச் சேர்ந்த சூசை அருளப்பு 08-12-92 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற மாகிறேற்றின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அநதோனிப்பிள்ளை (யாழ். மாநகர சபை), அருளானந்தம் (ஜேர்மனி), அல்வின், தோமஸ், சில்வேஸ்ரர் (அவுஸ்ரேலியா), வில்விறீடா, துரை, பிரான்சிஸ்கா, ஜெரன்சியா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு தந்தையும், மணி, பவுண் (ஜேர்மனி), ராசாத்தி, ராணி, தங்கம் (அவுஸ்ரேலியா), மாணிக்கராசா, வேவி, டோமினிக், அல்வின் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10-12-92) பிற்பகல் 3 மணிக்கு நல்லடக்கத்திற்காக பரி கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
அ. தோமஸ்
(மகன்)

இல. 859 3. கோவில் ஒழுங்கை,
பாஷையூர் [சி-3563]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

09.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 7042

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-6350, 26-3878, 24-6336, 22-5857, 28-1712, 24-5167 27-7274, 70-9694, 26-2317, 26-6075, 26-0651, 41-5979 26-4376, 24-5029, 24-4242.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-3495, 27-9825, 26-0495, 24-5137, 41-8035, 26-5725, 26-3473, 26-4526, 24-0528, 26-3321, 27-4301, 24-5529 26-0423, 28-2342, 22-7956, 42-4126, 27-7263, 26-4429, 24-4957, 41-4194, 28-3429, 26-9626, 27-9404, 27-7750


ச
ல்

புதிய பிரிவுகள்
12-12-92 முதல்
UNIVERSAL
FOR GOD AND COUNTRY
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி.31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.